

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 05-10-2025


# ஆர்.எஸ்.எஸ். மிரட்டலில் பிரதமர்!

இந்திய அரசமைப்புச் சட்டத்தை ஏற்காத - இந்திய தேசியக் கொடியை ஏற்காத - ஜனநாயகம் என்ற சொல்லை ஏற்காத - அரசமைப்புச் சட்ட விழுமியங்களை ஏற்காத - மூன்று முறை இந்திய நாட்டில் தடை செய்யப்பட்ட ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி இருக்கிறார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

ஆர்.எஸ்.எஸ்., எனப்படும் ராஷ்டிரிய ஸ்வயம்சேவக் சங்கம், 1925ஆம் ஆண்டு மஹாராஷ்டிராவின் நாக்பூரில் தொடங்கப்பட்டது. இந்த இயக்கத்தின் நூற்றாண்டு விழா, டெல்லியில் நடைபெற்றது. இந்த விழாவில் பங்கேற்ற பிரதமர் மோடி, சிறப்பு நாணயம் மற்றும் அஞ்சல் தலையை வெளியிட்டார். ரூ.100 மதிப்பு கொண்ட நாணயத்தின் ஒரு பக்கத்தில் தேசியச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. மறுபுறத்தில், சிம்ம வாகனத்தில் வரத முத்திரையுடன் பாரத மாதா இருக்கும் படமும், அதனை ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் வணங்குவது போன்ற உருவமும் பொறிக்கப்பட்டுள்ளது.

இந்த நாணயத்தில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நூற்றாண்டு விழா என்ற வாசகம் ஆங்கிலத்திலும், இந்தியிலும் இருக்கிறது. 'அனைத்தும் நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. நாட்டிற்கே அனைத்தும் சொந்தம். என்னுடைய எதுவும் இல்லை' எனப் பொருள்படும் வாசகமும் பொறிக்கப்பட்டு உள்ளது.

சிறப்பு நாணயத்துடன் வெளியிடப்பட்ட அஞ்சல் தலையில் '1963ஆம் ஆண்டு குடியரசு தின விழாவின் போது நடந்த அணிவகுப்பில், ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் பங்கேற்ற புகைப்படம்' இடம்பெற்றுள்ளது.

**அது என்ன 1963 படம்? இந்தியா குடியரசு ஆன 1950 ஆம் ஆண்டு அவர்கள் அமைப்பு தேசியக் கொடியை வணங்கும் படத்தை வெளியிட்டிருக்க வேண்டியதுதானே? உண்மையான தேச பக்த அமைப்பாக இருக்குமானால் 1925 ஆம் ஆண்டு தேசத்துக்காகப் போராடிய புகைப்படத்தை வெளியிட்டு இருக்கலாமே? இந்தியா விடுதலை அடைந்த 1947 ஆகஸ்ட் 15 அன்று தேசியக் கொடியை வணங்கி இருந்தால் அதனை வெளியிட்டு இருக்கலாமே? 'நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம்' என்பதைப் போல வரலாற்றை 1963 ஆம் ஆண்டில் இருந்து எதற்காகத் தொடங்குகிறீர்கள்?**

ஏனென்றால் இந்திய விடுதலைப் போராட்டத்தை ஏற்காத அமைப்பு அது. விடுதலைக்குப் போராடாத அமைப்பு அது. 'பிரிட்டிஷ் எதிர்ப்பு என்பது மட்டுமே தேசப்பற்று ஆகாது' என்றும், 'தேசியவாதம் ஆகாது' என்றும் சொன்னவர் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர் கோல்வார்க்கர். ஒத்துழையாமை இயக்கத்தையும், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தையும் "சட்டத்தை மதிக்க வேண்டியது இல்லை என்ற நினைப்பை உருவாக்கிய இயக்கம்" என்று சொன்னவரும் அவர்தான்.

'இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுதிய மேதாவிகளுக்கு மனுஸ்மிருதி தெரியவில்லை' என்று எழுதியவர் கோல்வார்க்கர். "மனு தர்ம சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசியலமைப்புச் சட்டம் வகுக்கப்பட வேண்டும்" என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர்களில் ஒருவரான சுதர்சன் சொன்னார். இந்தியாவின் அரசியல் நிர்ணய சபையானது மூவர்ணக்கொடியை இந்தியாவின் தேசியக் கொடியாக அறிவித்த போது ஆர்.எஸ்.எஸ். அமைப்பு அதனை ஏற்கவில்லை.

- இந்துக்களும் இசுலாமியர்களும் இணைந்து பிரிட்டிஷாருக்கு எதிராகப் போராடுவதை - இது போன்ற கூட்டு தேசிய நடவடிக்கைகளை எதிர்த்தவர்கள் இவர்கள். 'வேர் வரை செல்லும் வேறுபாடுகள் கொண்ட இனங்களும் கலாச்சாரங்களும் ஒன்றுபட்ட முழுமையாக ஒன்றிணைக்கப்படுவது முற்றிலும் இயலாத ஒன்று என்பதை ஜெர்மனி நமக்குக் காட்டியுள்ளது" என்று கோல்வார்க்கர் சொன்னது இதனைத்தான்.
- ஜனநாயகம் என்பதையே மேலை நாட்டுக் கருத்தாக்கம் என்று நினைக்கக் கூடியவர்கள் இவர்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சி, நாடாளுமன்ற உறுப்பினர்களது சிந்தனையில் உருவாக்கப்படும் சட்டங்கள் ஆகியவற்றுக்கு மரியாதை தராமல் 'ஏகசாலக் அனுவர்த்தித்வா' என்று சொல்லப்படும் ஒற்றைத் தலைவரின் அதிகாரத்துக்கு கேள்விக்கு இடமின்றி அடிபணியும் கொள்கையை அரசியல் - ஆட்சியல் கோட்பாடாக மாற்றுவதுதான் இவர்களது நடைமுறையாகும்.

சாதிப் பாகுபாட்டை முழுக்க முழுக்க நியாயப்படுத்தும் அமைப்பு இது. சாதிப் பிரிவு என்பதையே 'வர்ண வியாவஸ்தா' என்று சொல்லிக் கொள்வார்கள். சாதி அமைப்பு முறைதான் இந்தியாவைக் காப்பாற்றுவது என்ற கொள்கை கொண்டவர்கள் இவர்கள். 'சாதி அமைப்பு முறையானது சமூகத்தில் ஒற்றுமையைக் காப்பதற்கே உதவி செய்திருக்கிறது' என்று சொன்னவர் கோல்வார்க்கர்.

இன்றைக்கு இருக்கும் மாநிலங்கள் என்ற அமைப்பையே ஏற்காதவர்கள் இவர்கள். சமஸ்கிருதத்தை ஆட்சி மொழியாக ஆக்க நினைப்பவர்கள். சமஸ்கிருதம் ஆட்சிமொழி ஆகும் வரை இந்தியை ஆட்சி மொழி ஆக்க நினைப்பவர்கள் இவர்கள். இந்த அமைப்பின் நூற்றாண்டு விழாவை, இந்தியப் பிரதமர் கொண்டாடுவது இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கே எதிரானது ஆகும்.

**"நம் தேசப்பிதாவைக் கொன்றொழித்த மதவாதியின் கனவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் நூற்றாண்டுக்கு, நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருப்பவரே அஞ்சல் தலையும் நினைவு நாணயமும் வெளியிடும் அவல நிலையில் இருந்து இந்தியாவை மீட்க வேண்டும்!" என்று மிகச் சரியாகச் சொல்லி இருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

**"ஆர்.எஸ்.எஸ். இயக்க நினைவு நாணயத்தை வெளியிட்டது அரசியலமைப்புச் சட்டத்தை அவமதிப்பதாகும்"** என்று கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மோடியின் இந்த ஆக்டிங்க்கு பின்னணி என்ன?

**ஆர்.எஸ்.எஸ். அமைப்பு பிரதமர் மோடியை மிரட்டி வருகிறது என்றே டெல்லி தகவல்கள் சொல்கின்றன. மோடி நினைக்கும் ஆளை பா.ஜ.க. தலைவராக நியமிக்க முடியவில்லை. ஆர்.எஸ்.எஸ். அமைப்பு சொல்லும் நபரை, மோடி நியமிக்க மறுக்கிறார். இந்த நிலையில் இரண்டு துணை பிரதமர்களை நியமிக்கச் சொல்லி ஆர்.எஸ்.எஸ். அமைப்பு கட்டாயப்படுத்தி வருவதாகவும் சொல்லப்படுகிறது. பா.ஜ.க. எம்.பி.க்களே மூன்றாகப் பிரிந்து கிடக்கிறார்கள் என்கிறார்கள். '75 வயதானவர் மோடி அவர் பதவி விலக வேண்டும்' என்றும் சிலர் சொல்லத் தொடங்கி இருக்கிறார்கள். இத்தகைய அரசியல் நெருக்கடிகளில் இருந்து தப்பவே நாணயம் வெளியிட்டார், அஞ்சல் தலை வெளியிட்டார்.**

**தனக்கு ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை சமாளிக்க அரசமைப்புச் சட்டத்தை கேலிக்கூத்து ஆக்கக் கூடாது.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.10.2025) இராமநாதபுரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 176 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவிலான 109 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 134 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 150 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ. முருகேசன், இராம. கருமாணிக்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.10.2025) இராமநாதபுரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார். உடன் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் உள்ளார்.

## நாட்டுக்கே வழிகாட்டும் திட்டங்களைச் செயல்படுத்தும்

# 'திராவிட மாடல்' ஆட்சி தொடரத் துணை நிற்கும் மக்களின் உறுதி!

## இராமநாதபுரம் அரசு விழாவையொட்டி — முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

இராமநாதபுரம், அக். 5-

இராமநாதபுரத்தில் நேற்று அரசு விழாவில் கண்ட மக்களின் எழுச்சி குறித்து வலை தளத்தில் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை நிலைநாட்டி, நாட்டுக்கே வழிகாட்டும் திட்டங்களைச் செயல்படுத்தி வரும் நம்முடைய 'திராவிட மாடல்' ஆட்சி தொடரத் துணை நிற்கும் உங்கள் அனைவரின் உறுதியை, இராமநாதபுரம் மக்களிடம் கண்டேன்!" என்று குறிப்பிட்டார்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

**தவறு செய்தவர்கள் தவழ்ந்து சென்று தஞ்சமடையும் Washing Machineதான் பா.ஜ.க.**

**அங்கு சரணாகதி அடைந்துவிட்டு, தமிழ்நாட்டுக்கு எதிரான செயல்களுக்குத் துணைபோகும் கொள்கையற்ற கூட்டத்தைப் புறந்தள்ளி, "தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை நிலைநாட்டி, நாட்டுக்கே வழிகாட்டும் திட்டங்களைச் செயல்படுத்தி வரும் நம்முடைய 'திராவிட மாடல்' ஆட்சி தொடரத் துணை நிற்கும் உங்கள் அனைவரின் உறுதியை, இராமநாதபுரம் மக்களிடம் கண்டேன்!"**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## கரூர் சம்பவம்

# மனிதர்களால் உருவாக்கப்பட்ட பேரழிவு!

## சென்னை உயர்நீதிமன்றம் கருத்து!

சென்னை, அக்.5–

கரூரில் த.வெ.க. கூட்டத்தில் 41 பேர் பலியானது மனிதர்களால் உருவாக்கப்பட்ட பேரழிவு என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

கரூரில், த.வெ.க. தலைவர் விஜய் பிரச்சார கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி, 41 பேர் பலியாகியுள்ள நிலையில், அரசியல் கட்சிகளின் ரோட் ஷோக்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்க வேண்டும் என்றும், அதுவரை எந்தக் கட்சிகளுக்கும் ரோட் ஷோக்களுக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் சென்னை வில்லிவாக்கத்தைச் சேர்ந்த பி.ஹெச்.தினேஷ் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு, நீதிபதி என்.செந்தில்குமார் முன் விசாரணைக்கு வந்தபோது, தமிழ்நாடு அரசுத்தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன், வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கும் வரை எந்த கட்சிக்கும் பேரணி செல்ல அனுமதி வழங்கப்படாது என உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தெரிவித்ததாகக் குறிப்பிட்டார்.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பாக பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, த.வெ.க. கரூர் மாவட்டச் செயலாளர் மதியழகன், நகர செயலாளர் பவுன்ராஜ் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், துணைப்பொதுச் செயலாளர் நிர்மல்குமார் ஆகியோர் மீதும் வழக்குப்பதிவு செய்துள்ள தாகவும், அவர்கள் இருவரும் முன் ஜாமீன் கோரியுள்ளனர் என்றும், புலன் விசாரணை நடந்து வருகிறது எனவும் காவல் துறை தரப்பில் ஆஜரான தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா விளக்கமளித்தார்.

இதையடுத்து நீதிபதி செந்தில்குமார், இந்தச் சம்பவத்தில் பலியானவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டார்.

பின்னர், வீடியோக்களை பார்க்கும் போது வேதனை அளிக்கிறது எனக் குறிப்பிட்ட நீதிபதி செந்தில்குமார், 2 பேர் மட்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். வேறு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. அனைத்தையும் அனுமதித்துள்ளீர்களா? என அதிருப்தி தெரிவித்தார்.

காவல்துறை கண்மூடிக் கொண்டிருக்க முடியாது. முதல்வர், எதிர்க்கட்சி தலைவர் என அனைவரும் சம்பவ இடம் சென்றுள்ளனர் எனத் தெரிவித்த நீதிபதி, நடிகர் விஜய் பயணித்த பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக வீடியோக்கள் வெளியாகியுள்ளன எனச் சுட்டிக்காட்டி னார்.

மேலும் பல்வேறு கேள்விகளை நீதிபதி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர், த.வெ.க கேட்ட இடத்தை தான் ஒதுக்கினோம். 11 நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. இரு நிபந்தனைகள் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டன. மீதமுள்ள நிபந்தனைகள் மீறப்பட்டன. எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அதே இடத்தில் பிரச்சாரம் செய்துள்ளார். த.வெ.க நிகழ்ச்சிக்கு 559 போலீசார் பாதுகாப்பு பணிக்கு அமர்த்தப்பட்டனர். அரசு மீது குறை கூறுவது எளிது. டிசம்பர் மாதம் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி திடீரென செப்டம்பருக்கு மாற்றப்பட்டுள்ளது என விளக்கம் அளித்தார்.

கரூரில் நடந்த சம்பவம், மனிதர்களால் உருவாக்கப்பட்ட பேரழிவு. நீதிமன்றம் இதை கண்மூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. பொறுப்பை தட்டி கழிக்க முடியாது எனத் தெரிவித்தார்.

பின்னர், பெண்கள், குழந்தைகள் பலியான நிலையில், கட்சி தொண்டர்களை, ரசிகர்களை பொறுப்பற்ற முறையில் கைவிட்டு விட்டு ஓடிய, த.வெ.க. தலைவர் விஜய் உள்ளிட்ட நிர்வாகிகளுக்கு தலைமைப் பண்பு இல்லை. சம்பவத்துக்கு பொறுப்பேற்கவும் இல்லை என கண்டனம் தெரிவித்தனர் நீதிபதிகள்.

**ஜாமீன் மனு நிராகரிப்பு!**

இந்நிலையில், உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தவெக நிர்வாகிகள் புஸ்ஸி ஆனந்த் மற்றும் சிடிஆர் நிர்மல் குமார் முன்ஜாமின் மனு மீதான விசாரணை நடைபெற்று வருகிறது.

அப்போது, புஸ்ஸி ஆனந்த், சிடிஆர் நிர்மல்குமார் ஆகியோர் முன் ஜாமீன் கோரிய மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.



சேலத்தில் முதல்வர். துணை முதல்வர். விளையாட்டுதுறையை. ஊக்குவிக்க வேண்டும் என்று கூறியதின் பேரில். மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை 2025–2026ம் ஆண்டுக்கான செஸ் விளையாட்டு போட்டியை அமைச்சர். இரா. இராஜேந்திரன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர். டாக்டர். பிருந்தா தேவி, மேயர்.ஆ. ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர். இளங்கோவன், துணை மேயர். சாரதாதேவி, மண்டல குழு தலைவர் உமாராணி உட்பட துறை அதிகாரிகள் இருந்தனர்.